Koviloor Digital Library

315
9968
325

ஓம்

பழநிக் குமரா

பாத யாத்திரை வழிப் பாடல்



அன்பளிப்பு: ம[illegible]லயம்

அருள்நெறித் திருக்கூட்டம்

கண்டவராயன்பட்டி.

Koviloor Digital Library

ஓம்

சிவ சிவ

சிவநெறிச் செல்வரின் சிறந்த வாழ்த்துக்கள்

பழநி பாதயாத்திரை நகரத்தார் சமூகத்தின் பக்தி நிறைந்த சரித்திர பிரசித்தி பெற்ற சமய வழிபாடாகும். இவ்வழிபாட்டை நகரத்தார் மரபு தோன்றிய காலம் முதல் இன்றுவரை கடைப்பிடித்து வருகின்றனர்.

நகரத்தார்கள் முதன்முதலில் பண்டம் மாற்றுதல், உப்பு, ஆகிய வியாபாரங்கள் செய்த இடம் பழநி. அன்று முதல் இன்று வரை பழநித் தண்டாயுதபாணி சுவாமியை கடல்கடந்து வர்த்தகம் செய்யச் சென்ற இடங்களிலெல்லாம் தங்களின் குலக்கடவுளாக ஏற்று முருகப் பெருமானுக்கு திருக்கோவில் கட்டி வழிபாடு செய்து கொண்டாடி வருவதை உலக சரித்திரம் பொன் எழுத்துக்களால் பொறித்து போற்றுகிறது.

இதனால் பிற சமூகத்தினர் பழநியம்பதியில் திருவருள் புரியும் முருகப் பெருமானை **செட்டி மகனே தங்கக் கட்டி மணியே** என்று சிறப்பாக அழைக்கின்றனர்.

இன்று பழநி தைப்பூச விழா என்றால் பல பகுதிகளிலிருந்தும் வழிபாடு செய்ய லட்சோப லட்சம் மக்கள் பாதயாத்திரை செய்து வருவதும் செட்டிநாட்டிலிருந்து நூற்றுக்கணக்கானவர் சக்கரைக் காவடி கட்டி நகரத்தார் ஆண்களும் பெண்களும் திரள் திரளாக வருவதை கண்டு பெருமையோடு பாராட்டுகின்றனர். நகரத்தார்களின் தொண்டு சமய வளர்ச்சிக்கு உற்ற துணையான தொண்டாகும்.

எனது வாழ்த்துக்கள்

ஆர். எம். ரெங்கநாதன் செட்டியார்
சௌத் இந்தியா கார்ப்பரேசன்
கோயம்புத்தூர்.

குறிப்பு:

இப்பெரியவர் செட்டிநாட்டு அரசு குடும்பத்தின் தலைமை மேலாளர் ஆவர். 80 வயது நிறைந்த சிவபக்தர். நகரக்கோயில் ஒன்பதில் ஒன்றான வயிரவன்பட்டி ஸ்ரீ வடிவுடையம்பாள் வளரொளிநாதர் திருக்கோவில் தர்மகர்த்தாக்களில் ஒருவர். சிறந்த பண்பாடுடையவர்.

Koviloor Digital Library





பழநிக் குமரா

பழநிப் பாதயாத்திரை வழி பாடல்

ஆக்கியோர்கள் :

பேராசிரியர்

அருட்கவி திரு. கு. சே. ராமசாமி M. A.

பேராசிரியர்

திரு. வ. தேனப்பன் M. A. P. G. H. E. C. J. C. I. A.

புலவர் மாமணி

திரு. மா. முத்துராமன் M. A. M. Ed.

வழக்கறிஞர்

திரு. கண. பாலமுருகன் M. A. B. L.

அன்பளிப்பு :

அருள்நெறித் திருக்கூட்டம்,

கண்டவராயன்பட்டி.

16—1—1989

Koviloor Digital Library

Koviloor Digital Library

37-5

ஓம்

சிவ சிவ

எங்கள் பணிவான வார்த்தைகள் சில

செட்டி நாட்டிலிருந்து, தைப்பூச வழிபாடு செய்ய பழனிச் சேத்திரத்திற்கு பாத யாத்திரை செய்யும் நகரத்தார்களும், பக்தர்களும், தாய்மார்களும், காவடி எடுத்துச் செல்பவர்களும் கண்டவராயன்பட்டி ஏரிக் கரையில் திருக்கோவில் கொண்டெழுந்திருக்கும் அருள்மிகு சித்தி விநாயகப் பெருமானை தரிசித்து செல்ல வேண்டும் என்பது தொன்று தொட்டுள்ள மரபாகும்.

இங்குவரும் பக்தர்களை வரவேற்று இவ்வாண்டு "பழனிக்குமரா" என்ற தலைப்பில் இந்நூலை வெளியிட்டு பக்தர்கள் திருவடி வணங்கி சமர்ப்பிக்கின்றோம்.

திருவருள் துணை நிற்க!

கண்டவராயன்பட்டி
விபவ தை 3
16—1—'89

நா. அருணாசலன்,
செயலாளர்,
அருள்நெறித் திருக்கூட்டம்.

Koviloor Digital Library

ஓம்
சிவ சிவ

திருவண்ணாமலை ஆதினம்
ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிய பரமாச்சாரிய சுவாமிகள்
"குன்றக்குடி அடிகளார்"

திரு. நா. அருணாசலனுக்கு வழங்கிய பாராட்டுரை

உலகத்து மக்கள் முப்பிறிவினர், தான் உழைக்காமல் வஞ்சித்து வாழ்பவர் ஒரு பிறிவினர், தான் உழைத்து தான்மட்டும் அனுபவித்து வாழ்பவர் ஒரு பிறிவினர் தான் உழைத்தும் தனக்கென வாழாது பிறருக்கென வாழ்பவர் ஒரு பிறிவினர்.

இதில் மூன்றாம்பிறிவை சார்ந்தவர் நமது அன்பிற்குறிய
அருள்நெறித் திருக்கூட்டச் செயலாளர்
திரு. நா. அருணாசலன்
திரு. நா. அருணாசலன் 32 ஆண்டுகளாக தொடர்ந்து பழநிப்பரமனைத்தரிசிக்க பாதயாத்திரை செய்யும் பக்தர்கள் வழிநடையில் பிரயாணம் செய்ய அறிஞர், கவிஞர்ககளையணுகி பக்திப்பாடல்களைத் திரட்டி அதனை அச்சிட்டு நூலாக்கி பக்தர்களுக்கு இலவசமாக விநியோகித்து வருவது அவரது தெய்வ பத்தியையும் சுயநலமற்ற சேவை யையும் சமயத்தொண்டுகளையும் கண்டு மகிழ்ச்சியடை யாதவர் யாருமிலர்.

பழநிப்பரமன் திருவருள், நமது அருள்நெறி இயக்கம் வளரத்தொடர்ந்து தொண்டு செய்ய நீண்ட ஆயுளையும் எல்லா நலனையும் நம் திரு. நா. அருணாசலனுக்கு கொடுக்க வேண்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

திருவருள் துணைநிற்க!

Koviloor Digital Library

ஓம்

அருள்மிகு கற்பக விநாயக வணக்கம்



பிள்ளையார் பட்டி தனில்
பேறுகள் வழங்கும் தெய்வம்
அள்ளியே வழங்கும் தெய்வம்
அருள் மிகக் கொண்டதெய்வம்
வள்ளலாய் விளங்கும் தெய்வம்
வளர் புகழ் பெற்ற தெய்வம்
கள்ள மில் பக்தர் தெய்வம்
கற்பக மூர்த்தி தெய்வமன்றோ!

(வ. தேனப்பன்)

Koviloor Digital Library

ஓம்

முருகா சரணம்



தண்டம் ஒரு பக்கம் தாங்கி, மறுபக்கம்
அண்டபகிரண்டத்தை ஆதரிக்கும் வேல்தாங்கி,
கண்டார் இதயம் களிக்க வந்த மேனியிலே
திண்ணென்று பட்டைத் திருநீறு தான்புனைந்து,
தொண்டர் குழாங்கள் துதிக்கப் பழனியிலே
பண்டார மாஞர்க்குப் பல்லாண்டு! பல்லாண்டு!
பழனி மலையார்க்குப் பாடுதுமே பல்லாண்டு!

அருட்கவி கு. செ. இராமசாமி எம். ஏ.

நல்வாழ்த்து

சரவண மின் பொருள் விற்பகம்

காரைக்குடி.

Koviloor Digital Library

கற்பக மூர்த்தி

அருட்கவி கு. செ. இராமசாமி, எம். ஏ., சிவகங்கை

பல்லவி

கற்பக மூர்த்தி — ஐயா — கற்பக மூர்த்தி
கற்பக மூர்த்தி — ஐயா — கற்பக மூர்த்தி
(கற்பக மூர்த்தி)

சரணம்

மூலமுதல் ஆனவனே கற்பகமூர்த்தி — நீ
முன்வந்து காத்தருளாய் கற்பகமூர்த்தி
காலமிது காலமிது கற்பகமூர்த்தி — என்
கவலைகளைத் தீர்த்தருளாய் கற்பகமூர்த்தி.
(கற்பகமூர்த்தி)

நல்லநல்ல சேதிவரும் கற்பகமூர்த்தி — மனம்
நாடியது தேடிவரும் கற்பகமூர்த்தி
வல்லமைகள் பொங்கிவரும் கற்பகமூர்த்தி — உன்னை
வணங்கிவந்தால் வெற்றிவரும் கற்பகமூர்த்தி
(கற்பகமூர்த்தி)

வெற்றிதர வருவாயே கற்பகமூர்த்தி — நான்
வேண்டும்வரம் தருவாயே கற்பகமூர்த்தி
உற்றதுணைத் தெய்வதமே கற்பகமூர்த்தி — உன்னை
ஓதுவதும் செய்தவமே கற்பகமூர்த்தி.
(கற்பகமூர்த்தி)

Koviloor Digital Library

மன்னவனே நீயய்யா



பொய்கை தன்னில் பிறந்தவனே முருகய்யா
பூவையரின் மடியினில் தவழ்ந்தவனே முருகய்யா
தேவியுயர் யானையை மணந்தவனே முருகய்யா
பாவையவள் வள்ளியை நயந்தவனே முருகய்யா

தெள்ளு தமிழை தந்தவனே முருகய்யா
அள்ளு சுவையாய் இனிப்பவனே முருகய்யா
கள்ள விழிப் பார்வையிலே முருகய்யா
உள்ளம் தன்னைக் கவர்ந்தவனே முருகய்யா

Koviloor Digital Library

கலைக ளெல்லாம் கண்டவனே முருகய்யா
சிலைக ளெல்லாம் ஒளிர்பவனே முருகய்யா
மலைக ளெல்லாம் நிற்பவனே முருகய்யா
மனங்க ளெல்லாம் வந்திடுவாய் முருகய்யா

தும்பிக்கை விநாயகர் பின்னவனே முருகய்யா
நம்பிக்கை காப்பதில் முன்னவனே முருகய்யா
தெம்பினைத் தருவதில் மன்னவனே முருகய்யா
வம்பினைத் தீர்ப்பதில் வல்லவனே முருகய்யா

– புலவர்மாமணி மா. முத்துராமன், எம்.ஏ.எம்.எட்.

நல்வாழ்த்து

ஜோதி மெடிக்கல்
செக்காலை ரோடு,
காரைக்குடி.

நல்வாழ்த்து

நியூ ஸாம்ஸன் சோடா பாக்டரி
பெரியார் சிலை ரோடு, நியூடவுன்,
காரைக்குடி.

Koviloor Digital Library

பழனிக்குமரா! மால்மருகா!!

வ. தேனப்பன்

பழனிக் குமரா! மால் மருகா!
பழமாய் ஆக்கும் திருக்குமரா!!

அழகன் முருகனைக் காண்பதற்கு
ஆசை மிகவும் பொங்கிடுதே!
பழமாம் அவனருள் சுவைப்பதற்குப்
பக்தரின் மனமும் ஏங்கிடுதே!
(பழனிக்குமரா!)

தந்தைக்கும் உபதேசம் செய்தவனே!
தயவுடன் இன்று இங்குவந்து
எந்தனுக் குபதேசம் செய்துவைத்தால்
ஏழைகள் மனமும் மகிழ்ந்திடுமே!
(பழனிக்குமரா!)

சூரனைக் கொன்று அழித்தவனே!
சுடர்விடும் வேலைப் பெற்றவனே!
மாருத துன்பமாம் சூரர்களை
மாய்த்தெனமைக் காப்பாய் சண்முகனே!
(பழனிக்குமரா!)

முயற்சிகள் செய்து உயர்கவென
முருகனே மலைமேல் நிற்கின்றாய்!
அயர்வினில் வாடி விழும்போது
அன்பரசே எமைத் தாங்கிடுவாய்!!
(பழனிக்குமரா!)

Koviloor Digital Library



அன்பெனும் ஊற்றைக் காண்பதற்கு
அரிதாய்ப் போன காரணத்தால்
இன்புறு முருகன் அடிபணிந்தோம்
இனிமையின் ஊற்றே வந்திடுவாய்!
(பழனிக்குமரா!)

கலிகாலத்தில் துன்பங்கள்
கணக்கே யின்றிப் பெருகியதால்
எளியோர் தம்மைக் காத்திடவே
ஏறும் மயிலேறி வந்திடுவாய்!
(பழனிக்குமரா!)

பழனிக்கு நடக்க விரும்பிடினும்
பாதங்கள் சோர்ந்து போயினவே!
அழகன் முருகன் பேரைச் சொன்னால்
அதிசய மாய்அவை நடநதிடுதே!!
(பழனிக்குமரா!)

ஆறுபேர் தாய்மார் வளர்த்ததனால்
அருள்மிக உனக்கு உண்டென்பார்.
நோய்வாய்ப் பட்ட பக்தருக்கு
நொடியினில் நலத்தை நல்கிடுவாய்!
(பழனிக்குமரா!)

வீட்டுக்கு வீடு வாசல்படி
விளையும் சிக்கல்கள் நூறுபடி!
வேட்டுவ வள்ளி சொல்லின்படி
விரைந்தெமைக் காப்பாய் நல்லபடி!
(பழனிக்குமரா!)

தேனப்பன் நீதான் பழனியப்பா!
திரவியம் நீதான் பழனியப்பா!
கால்நடை யாய்வாரோம் பழனியப்பா!
காண்போம் விரைவினில் பழனியப்பா!
(பழனிக்குமரா!)

Koviloor Digital Library

வேல் வேல் வேல் வேல் என்று பாடு!

வ. தேனப்பன்

வேல் வேல் வேல் வேல் என்று பாடு! — எந்த
வேதனையும் நிச்சயம் பறந்தோடும் பாரு!
மேலான நன்மைகள் பெருகும் — இந்த
மேதினியில் உறுதியாய் முருகனருள் உதவும்
(வேல் வேல் வேல்)

மலையோரம் வீசிடும் காற்றும் — அந்த
மால்மருகன் புகழையே என்றென்றும் பேசும்!
கலைமிக்க கதிரவன் ஒளியும் — நமது
கந்தனின் முகத்தையே பிரதிபலித் தொளிரும்
(வேல் வேல் வேல்)

ஏழைகள் செல்வராய் ஆவார் — எங்கள்
எழிலான முருகனின் அருள்வெள்ள மதனால்
வாழைபோல் சந்ததிகள் தொடரும் — நம்
வடிவேலன் கருணையால் வம்சங்கள் பெருகும்
(வேல் வேல் வேல்)

கன்னியர்கள் கந்தனவன் அருளால் — நாளை
கல்யாண மாகியே களிப்பினைப் பெறுவார்
என்றென்றும் வேலைக்கு அலையும் — இளைஞர்
ஏற்றதொரு வேலையை எளிதாகப் பெறுவர்
(வேல் வேல் வேல்)

தீராத நோய்களும் தீரும் — அவன்
திருக்கண்கள் பட்டாலே நோய்குணம் ஆகும்
மாருத கல்மனம் மாறும் — அந்த
மன்னவன் அருளதால் மண்ணகம் மலரும்.
(வேல் வேல் வேல்)

Koviloor Digital Library

விலைவாசி மலையுச்சி ஏறு! — அது
விருத்தனின் அருளதால் அடிவாரம் இறங்கும்
கலைஞர்கள் இமுவைரயில் ஏற — அந்தக்
கந்தனின் நன்மனம் உச்சிக்கு ஏற்றும்!
(வேல் வேல் வேல்)

மாருத பக்தியைக் கொள்வோம் — அந்த
மகராஜன் கருணையால் மனப்போல வாழ்வோம்
சீரான வாழ்வினை ஷெழ்வோம் — என்றும்
சிறந்தோங்கிச் சிறந்தோங்கி வெற்றியே காண்போம்
(வேல் வேல் வேல்)

பேறுகள் பதினாறும் பெறுவோம் — அந்தப்
பெம்மானின் அருளதால் ஆல்போல வாழ்வோம்
வேலொன்றே துணைஎன்று கொள்வோம் — இன்ப
வேலவன் துணைகொண்டு உயர்ந்தோங்கி வாழ்வோம்
(வேல் வேல் வேல்)



நல்வாழ்த்துக்கள்

பி. ஆர். நாராயணசாமி ஐயர் & Co.,

கண்ணன் பஜார்,

காரைக்குடி.

Koviloor Digital Library

செந்தில்வளர் கந்தனுக்கு ஜோதிமிக்க வேல்! வேல்!!

வ. தேனப்பன்

செந்தில் வளர் கந்தனுக்கு
ஜோதிமிக்க வேல்! வேல்!!
சொந்தமுடன் உதவும் வேலன்
திருவடிக்கு வேல்! வேல்!!

என்றும் நம்மைக் காக்கும் ஈசன்
எழிலதற்கு வேல்! வேல்!!
கன்றெனவே நம்மைக் காக்கும்
கந்தனுக்கு வேல்! வேல்!!

தெய்வானை கணவன் அவன்
திருவடிக்கு வேல்! வேல்!!
பெய்வானைப் போன்ற செல்வன்
பொன்னடிக்கு வேல்! வேல்!!

வள்ளியம்மை கணவனுக்கு
வயிரமதால் வேல்! வேல்!!
துள்ளிவரும் மயிலனுக்குத்
தூபமுடன் வேல்! வேல்!!

அள்ளி அள்ளி அளிக்கும் வள்ளல்
அருளினுக்கு வேல்! வேல்!!
கள்ளமில்லா பக்தர் தந்தை
கந்தனுக்கு வேல்! வேல்!!

எவர்குறையும் தீர்க்கும் கந்தன்
எழிலடிக்கு வேல்! வேல்!!
அவரவர்க்கு வேண்டியதை
அருளுகவே வேல்! வேல்!!

Koviloor Digital Library

தென் பழனி வேல் முருகா!

வ. தேனப்பன்



தென்பழனி வேல் முருகா — எங்கள்
திரவியமே மால் மருகா! — என்றும்
அன்பர்குறை தீர்ப்பதற்கு
அவனியினில் அவதரித்தாய்

இன்றெமது கண்ணின் முன்னே வா! — முருகா
இன்றெமது கண்ணின் முன்னே வா!

மாம்பழத்தைப் பெறுவதற்கு — அன்று
மயிலேறி வலம்வந்தவா — இன்று
மாப்பழமாய் பக்தர் மனம்
கனிந்திருக்கும் போதினிலே

இன்றெமது கண்ணின் முன்னே வா! — முருகா
இன்றெமது கண்ணின் முன்னே வா!

தேவர்குறை தீர்ப்பதற்கு — அன்று
தேரேறிப் போர்செய்தவா — இன்று
கால்நடையாய் வருகின்ற
பக்தர்குறை தீர்ப்பதற்கு

இன்றெமது கண்ணின் முன்னே வா! — முருகா
இன்றெமது கண்ணின் முன்னே வா!



Koviloor Digital Library

ஊற்றுத் தண்ணீரே!

வ. தேனப்பன்

ஊற்றுத் தண்ணீரே! — எங்கள்
உயர்வின் நாயகரே!
ஆறுமுகம் என்னும் — எங்கள்
அன்பின் கோபுரமே! (ஊற்றுத்)

உன்னை நம்பியே — நாங்கள்
உலகில் வாழ்கின்றோம்
என்றும் காப்பாற்றி — எங்கள்
ஏழ்மை தீர்த்திடுவீர். (ஊற்றுத்)

சின்னஞ் சிறுகன்றும் — நாங்கள்
செழித்து வாழ்ந்திடணும்
அன்புப் பயிரான — நாங்கள்
ஆல்போல் வளர்ந்திடணும். (ஊற்றுத்)

துன்ப வெப்பம்தான் — உலகில்
தொடர்ந்தே காய்ந்தாலும்
உன்றன் அருள்ஊற்று — சுரந்து
எங்களைக் காத்திடுமே! (ஊற்றுத்)

தண்ணீர் இல்லாமல் — எங்கள்
தாகம் தீர்ந்திடுமோ?
கண்ணீர் சிந்தாமல் — எங்கள்
கவலைகள் போக்கிடுவாய்! (ஊற்றுத்)

Koviloor Digital Library

அன்புத் தாகந்தான் — எமக்கு
அதிகம் இருக்குதையா
பண்புத் தாகந்தான் — எமக்கு
பக்தியால் வருகுதையா (ஊற்றுத்)

இன்பத் தாகத்தால் — ஏங்கும்
இளையவர் மகிழ்ந்திடவே
அன்பாம் இல்லறத்தை — நீதான்
அழைத்துக் கொடுத்திடுவாய் (ஊற்றுத்)

பொருளின் தாகத்தால் — பலரும்
பொசுங்கி வேகின்றார்
அருளின் தாகத்தால் — அவர்க்கு
அனைத்தும் தந்திடுவாய்! (ஊற்றுத்)

எல்லாம் அறிந்தவனே — எங்கள்
இறைவன் ஆதலினால்
எல்லாம் பெற்றிடுவோம் — என்றும்
இன்பம் கண்டிடுவோம். (ஊற்றுத்)

ஒவ்வொரு வர் குறையும் — நீதான்
உற்றுக் கேட்பதனால்
எவ்விதம் தீமைவரும்? — எமக்கு
என்றும் நன்மை வரும். (ஊற்றுத்)

நல்வாழ்த்து

அன்பு ஜெராக்ஸ்

மதுரை.

Koviloor Digital Library

பூக்களைப் பார்க்கும் போதினிலே...

வ. தேனப்பன்

பூக்களைப் பார்க்கும் போதினிலே
புனிதன் முருகனைக் காணுங்களே! (பூக்களைப்)

தாமரைப் பூக்களைப் பாருங்கள் — அதில்
தங்க வடிவேலன் முகம்காணுங்கள்
சாமந்திப் பூக்களைப் பாருங்கள் — அதில்
சண்முக நாதனின் கரம் காணுங்கள்
(பூக்களைப்)

மல்லிகைப் பூக்களைப் பாருங்கள் — அதில்
மன்னவன் புன்னகை காணுங்கள்
அல்லியின் பூக்களைப் பாருங்கள் — அதில்
அன்பனின் தண்ணருள் காணுங்கள்.
(பூக்களைப்)

பிச்சியின் பூக்களைப் பாருங்கள் — அதில்
பெம்மானின் வேலைக் காணுங்கள்
பச்சை மரிக்கொழுந்து பாருங்கள் — அதில்
பரம்பொருள் திருவுளம் காணுங்கள்
(பூக்களைப்)

ரோஜாப் பூக்களைப் பாருங்கள் — அதில்
ராஜாவின் மணம்தன்னைக் காணுங்கள்
ஜாதிப் பூக்களைப் பாருங்கள் — அதில்
சரவணன் உள்ளத்தைக் காணுங்கள்.
(பூக்களைப்)

பூக்களைப் பார்க்கும் போதிலெல்லாம் — அந்தப்
புண்ணியன் குணமே தெரியுமெனில்
மேலாம் பக்தியில் முற்றிவிட்டீர் — இனி
மோட்சம் உமக்கு நிச்சயமே!

Koviloor Digital Library

கந்தனின் பெயரே களிப்பினை நல்கும்

வ. தேனப்பன்

கந்தனின் பெயரே
களிப்பினை நல்கும்;
கண்கண்ட தெய்வமாமே!

எந்தனின் உடலும்
இணையில்லா உயிரும்
இறைவனின் கொடைதானே?
(கந்தனின்)

மண்ணக வாழ்வும்
மலர்ச்சியை நல்கும்
மன்னவன் கருணையாலே!

எண்ணிலா இன்பம்
என்றென்றும் மலரும்
இறைவனின் அருளாலே!
(கந்தனின்)

இருளினைப் போக்கி
ஒளியினை ஏற்றும்
இனியவன் முகம்தானே?

அருளினை நல்கி
அகிலத்தை வாழ்த்தும்
அன்பனின் கரம்தானே?
(கந்தனின்)

Koviloor Digital Library

துன்பத்தின் மூலம்
தொடர்ந்து நம் பாவம்
துடைப்பவன் அவன்தானே?

இன்பத்தைத் தந்து
இனிமையை அளிக்கும்
இறைவனின் மனம்தானே!
(கந்தனின்)

காட்டு வழியினில்
கடக்கின்ற போதும்
கடவுள் துணைவருவார்

பாட்டு வடிவினில்
பரிந்து அழைத்தால்
பத்திரமாய்க் காப்பார்!
(கந்தனின்)

சோர்ந்திடும் போது
சோர்வினை அகற்றச்
சொல்லுங்கள் அவன் புகழே!

காற்றினைப் போலக்
கஷ்டங்கள் பறக்கும்
கடவுளின் அருளாலே!
(கந்தனின்)

உறவினர் நண்பர்
ஊறுகள் செய்தால்
உடனே வழிபடுவீர்!

கரவினை மாற்றிக்
களிப்பினைப் பெறுவீர்
கடவுள்மேல் சத்தியமே!
(கந்தனின்)

Koviloor Digital Library

சோதனை போதும் பழனியப்பா!

வ. தேனப்பன்

சோதனை போதும் பழனியப்பா!
சாதனை செய்வோம் பழனியப்பா!

சுப்புச் சுப்பெனக் காலில் வலி
தொடர்ந்து துன்பம் தருகையிலே
சுப்பன் புகழைப் பாடுங்கள்
சுகமே தொடரும் பாருங்கள் (சோதனை)

கப்புக் கப்பென இடுப்பினிலே
கடிதாய் வாயு பிடிக்கையிலே
அப்பன் முருகனை அழையுங்கள்
அல்லல் ஓடும் பாருங்கள். (சோதனை)

சொட்டுச் சொட்டாய்க் குருதியதைத்
தொடர்ந்தே பாதம் சிந்துகையில்
மெட்டுப் போட்டுப் பாடுங்கள்
மேன்மை பெருகும் பாருங்கள் (சோதனை)

ஹரஹர சிவசிவ என்னுமல்
அம்மாடியென அமர்கையிலே
உரத்து வேல்வேல் சொல்லுங்கள்
உடனே ஓடுவீர் பாருங்கள் (சோதனை)

சோதனை போதும் பழனியப்பா!
வேதனை போதும் பழனியப்பா!
போதனை பெற்றோம் பழனியப்பா!
சாதனை செய்வோம் பழனியப்பா!!

Koviloor Digital Library

பழனியின் குமரா நல்வணக்கம்

வ தேனப்பன்

பழனியின் குமரா! நல்வணக்கம்!
பக்தரின் தலைவா! நல்வணக்கம்!
அழகதன் அரசே! அன்பதன் மலையே!
ஆறு முகச்செல்வா! நல்வணக்கம்!
(பழனியின் குமரா)

ஏழை பங்காளா! நல்வணக்கம்!
எளியவர் தெய்வமே! நல்வணக்கம்!
வாழைபோல் வளர வம்சங்கள் தழைக்க
வடிவேல் அருள்கவே! நல்வணக்கம்!
(பழனியின் குமரா)

கன்னியர் மாலை பெற்றிடவும்
காளையர் வேலை பெற்றிடவும்
அன்பு(ள்)ள சிங்கார வடிவேலர் சொல்போல்
அகிலமே தழைக்க நல்வணக்கம்!
(பழனியின் குமரா)

வாழ்வினில் தடைகள் ஏராளம்!
வருத்தத்திற் குதவுவோர் தாராளம்!
தாழ்வுகள் வருகையில் தயவுடன் தாங்கித்
தளிர்க்கச் செய்பவனே! நல்வணக்கம்!
(பழனியின் குமரா)

Koviloor Digital Library

கல்லும் முள்ளும் குத்திடினும்
கால்நடை யாக வருகின்றோம்
எல்லையே இல்லா இனியவன் அருளால்
இனிதே தொடரும்! நல்வணக்கம்!
(பழனியின் குமரா

கால்கள் கழன்று விழுந்திடினும்
கந்தனுன் பெயரைச் சொன்னதுமே
கால்களில் இறக்கை கட்டிக்கொண் டாற்போல்
கடிதே பறக்குதே! நல்வணக்கம்!
(பழனியின் குமரா)

அருள்பெறச் சிலபேர் நடக்கின்றார்
பொருள்பெறச் சிலபேர் நடக்கின்றார்
கருணையின் ஊற்றே உனைநம்பி நாங்கள்
சொன்னவை நடக்குதே! நல்வணக்கம்!
(பழனியின் குமரா)

இருளிலும் துணையாய் வருபவனே!
இன்பத்தைத் துன்பத்தில் தருபவனே!
பருவத்திற் கேற்ற ஆசைகள் அனைத்தையும்
பதமாய்த் தீர்ப்பாய்! நல்வணக்கம்!
(பழனியின் குமரா)

பேறுகள் எல்லாம் கிடைத்திடவும்
பெருமைகள் யாவும் சேர்ந்திடவும்
ஆறு முகமின்றித் துணையில்லை அதனால்
அடியவர் தலைவா நல்வணக்கம்!
(பழனியின் குமரா)

இறைவனின் துணைக்கு இணையேது?
இன்னருள் முன்னே ஈடேது?
இறைவனே உன்பேர் சொ(ல்)லப் பிறக்கும்
இனிமைகட் காக நல்வணக்கம்!
(பழனியின் குமரா)

Koviloor Digital Library

சந்தோஷம் பொங்குதே!

வ. தேனப்பன்

சந்தோஷம் பொங்குதே!
சந்தோஷம் பொங்குதே!!
சந்தோஷம் என்னில் பொங்குதே!!!
— அரோஹரா

கந்தனவன் ரட்சித்தான்
கவலைகளைத் தீர்த்திட்டான்
சந்தோஷம் என்னில் பொங்குதே!
(சந்தோஷம்)

தாயாகிக் காப்பவன்
தந்தையாகி வளர்ப்பவன்
சேயாகி இன்பம் தருபவன்
— அரோஹரா

நோயெல்லாம் தீர்ப்பவன்
நொடியில் நன்மை அளிப்பவன்
நமக்கிறைவன் ஆனதாலே!
(சந்தோஷம்)

துன்பம்வரும் போதெலாம்
தொடர்ந்து நம்மைக் காப்பவன்
தூயஜோதியான முருகன்!
— அரோஹரா

இன்பத்துக்கு எல்லையாம்
ஈடில்லாத சொர்க்கமாம்
எம்மிறைவன் திருவடிகளே!
(சந்தோஷம்)

Koviloor Digital Library 9968

செல்வங்களை வழங்குவான்
சிறந்த வாழ்வை நல்குவான்
சிங்கார வடிவேலனே !

— அரோஹரா

எல்லையில்லா இன்பத்தை
எல்லோருக்கும் அளிப்பவன்
எமக்கிறைவன் ஆனதாலே !

(சந்தோஷம்)

கவலையெனும் வலையிலே
கஷ்டப்படு வோர்களைக்
கருணையினால் காக்கின்றவன்

— அரோஹரா

தவமிருக்கும் பேர்க்கெலாம்
தகுந்த வரம் தருபவன்
தங்கமன மான முருகன் !

(சந்தோஷம்)

வாடுகின்ற பயிர்க்கெ(ல்)லாம்
வான்மழையாய் உதவுவான்
வாழ்விப்பான் நம் இறைவனே !

தேடுகின்ற இன்பத்தைத்
தினமளித்துக் காப்பவன்
திருமுருகன் என்பதாலே !

(சந்தோஷம்)

நல்வாழ்த்து

ராம்கோ கூட்டுறவு சொசைட்டி

திருப்புத்தூர்.

Koviloor Digital Library

ஓம் முருகா

ஓம்முருகா! ஓம்முருகா! ஓம்முருகா வேலவா!
உன்னைக்காண நடந்துவந்தோம் எம்பெருமான் வேலவா!
பழனிமலை மீதமர்ந்த எம்பெருமான் வேலவா!
பக்தர்களைக் காக்கவேணும் எம்பெருமான் வேலவா!

போதுமிந்த பூவாழ்க்கை எங்க முருகையா!
உன்பாதம் சரணடைந்தோம் தங்க முருகையா!
பக்தர்குறை தீர்ப்பவனே எங்க முருகையா!
பாரில்மழை பெய்யவேணும் தங்க முருகையா!

அருள்பெறவே ஆடிவந்தோர் கந்தவடிவேலா — உன்
திருஉருவைக் காணவேண்டும் கந்தவடிவேலா!
செய்தபாவம் தீரவேண்டும் கந்தவடிவேலா!
நாங்கள்சீராக வாழவேண்டும் கந்தவடிவேலா!

தங்கரதம் ஏறிவரும் பாலமுருகையா!
எங்கஇதயத்தில் பூசைசெய்தோம் கோல முருகையா!
தைப்பூசம் காணவந்தோம் பாலமுருகையா! — உன்
கைப்பாவை போலஆனோம் கோல முருகையா.

கண. பாலமுருகன், எம். ஏ. பி. எல்.
அட்வகேட், சிவகங்கை.